பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 12 | வியாழக்கிழமை | 28.08.2025 | அதிர்வு 27

## பாணந்துறையில் நேற்றிரவு ஒருவர் சுட்டுப் படுகொலை



பாணந்துறை, அலுபோகஹவத்த பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு ஆண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றில் இருந்த மேற்படி நபரை இலக்கு வைத்து மோட்டார் 06

# செம்மணியில் நேற்று 3 எலும்புக்கூடுகள் அடையாளம்



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று 3 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அகழ்வாய்வுத் தளங்களை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின் போது புதிதாக 16 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று மேலும் 3 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை, நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 06

# நாட்டுக்காக நாங்கள் ஒன்றிணைவோமே தவிர அரசியல் ஆதாயங்களுக்காக ஒன்றிணையோம்

## ரணிலைச் சுகம் விசாரித்த பின்னர் சஜித் தெரிவிப்பு

**“தனிப்பட்ட குழுக்களையோ அல்லது அரசியல் நோக்கங்களையோ இலக்காகக் கொண்டல்லாமல், நாட்டின் பிரச்சினைகளுக்குப் பதில்களைக் காண்பதற்கே எதிர்க்கட்சிகளின் பரந்தபட்ட கூட்டணி கட்டியெழுப்பப்படும்.”**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.** 06



# யாழ்.வரும் ஜனாதிபதி செம்மணிப் புதைகுழியை நேரில் பார்வையிடலாம்

## அமைச்சர் சந்திரசேகர் தகவல்



(எஸ்.நிதர்ஷன்)

வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட வாய்ப்புள்ளது என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

# சி.ஐ.டி.யின் வலைக்குள் சிக்கியுள்ள கம்மன்பில

## விசாரணைகள் ஆரம்பம்



முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுரவிடம் 06




தங்களுக்கு ஏற்ற மாதிரி சட்டங்களை வியாக்கியானம் செய்யும் வேலையை தேசிய மக்கள் சக்தி அரசுத் தரப்பினர் இப்போது தொடங்கி இருக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது உப்புச்சப்பற்ற காரணங்களின் அடிப்படையில் கைது நடவடிக்கை எடுப்பதற்காக ‘சட்டத்தின் முன் எல்லோரும் சமன்’ என்று வியாக்கியானம் கூறிய ஆளும் தரப்பினர், இப்போது ஆளாளுக்கு ஏற்ப – விடயங்களுக்கு ஏற்ப – சட்டத்தை மாற்றலாம் என்ற புதுக் கதையை அவிழ்த்து விடத் தொடங்கி இருக்கின்றனர்.

வெளிநாட்டுக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க வழியில் தன் சொந்த வேலைக்காக பிரிட்டனில் தரித்து வந்ததும், அதற்கான செலவினத்தை அரசில் கட்டியதும் அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்யும் செயல் என்று வியாக்கியானம் செய்யும் அரசு தரப்பிடம் பத்திரிகையாளர்கள் நேரடியாக ஒரு கேள்வியை கேட்டார்கள்.

“தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணச் 06







# மயிலிட்டியில் நிற்கும் 62 இந்தியப் படகுகளும் அள்ளிச்சென்று அச்சுவேலியில் கொட்டப்படும்

## இன்றும் நாளையும் நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்த குற்றச்சாட்டில் அரசுடைமையாக்கப்பட்டு மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் 62 இந்தியப் படகுகள் நாளை ஏற்றிச் செல்லப்பட்டு அச்சுவேலித் கைத்தொழில் பேட்டையில் கொட்டப்படவுள்ளன.

ஜனாதிபதி அநுராகுமர திசநாயக்க செப்ரெம்பர் முதலாம் திகதி மயிலிட்டித் துறைமுகத்தை பார்வையிட வருகின்றார். அதனையொட்டி அப் பகுதியில் தற்போது தரித்து நிற்கும் 123 இந்தியப் படகுகளில் பெரும் பகுதி உடனடியாக அங்கிருந்து அகற்றப்படவுள்ளன.

மயிலிட்டியில் தரித்து நிற்கும் 123 இந்தியப் படகுகளில் 48 படகுகளின் வழக்குகள் நிலுவையில் உள்ளன. 13 படகுகள் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டன. இதில் 7 படகுகள் இந்திய மீனவர்களால் எடுத்துச் செல்லப்படவுள்ளன. இதேபோன்று, அரச உடமையாக்கப்பட்ட 64 படகுகளும் தரித்து நிற்கின்றன.

அரச உடமையாக்கப்பட்ட 64 படகுகளில் முன்னாள் அமைச்சரின் பணிப்பில் மீனவ சங்கங்களிற்கு வழங்கப்பட்ட இரு படகுகள் தவிர்ந்த 62 படகுகளே இன்று முதல் மயிலிட்டியில் இருந்து அகற்றப்படவுள்ளன.

இவ்வாறு மயிலிட்டித் துறைமுகத்தில் உள்ள 62 படகுகளும் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் இன்று வெளியே இழுத்து எடுக்கப்படவுள்ளது. அவ்வாறு எடுக்கப்படும் படகுகள் பாரம் தூக்கிகள் மூலம் தட்டு பார ஊர்திகளில் ஏற்றப்பட்டு அச்சுவேலிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.











# ரணிலின் விடுதலைக்காகச் செயற்பட்ட அனைவருக்கும் சஜித் நன்றி தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல கட்சித் தலைவர்கள், சட்டத்தரணிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் இதற்காக இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்குப் பின்னர் எழுந்த ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட சவாலை வெற்றி கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளுடனும் கூட்டிணைந்த, தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

போராட்டத்தில் இணைந்து கொண்டவர்களை மிரட்டுவதற்கு அரசு பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டது. இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்பவர்களுக்கு உடனடி சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சட்டத்தரணிகள் குழாமொன்றை நிறுவ வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இதன்போது யோசனை முன்வைத்தார்.

இதன் பிரகாரம், இந்தக் குழாமை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி பெயரிடப்பட்டார். அதேபோல், இந்த அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் உட்பட பரந்தபட்ட ஒன்றிணைவைக் கட்டியெழுப்பத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய ஆகியோர் பெயரிடப்பட்டனர்.










# கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது! அதை விட்டுக்கொடுக்கவே முடியாது!

## விஜய் வெளியிட்ட கருத்துக்கு அமைச்சர் விஜித ஹேரத் பதிலடி



"கச்சதீவை மீளப் பெறுவது குறித்து இந்தியாவின் மத்திய அரசிடமிருந்தோ அல்லது இராஜதந்திர வழிகளிலோ எந்தக் கோரிக்கையும் விடுக்கப்படவில்லை. அது இலங்கைக்குச் சொந்தமானது என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. எனவே, விஜய் வெளியிட்ட கருத்தைப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது."

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் தென்னிந்தியத் திரைப்பட நடிகருமான விஜய், அண்மையில் மதுரையில் இடம்பெற்ற கட்சி மாநாட்டில் கச்சதீவு குறித்து கருத்துத் தெரிவித்ததை அடுத்து, இந்த விடயம் பரவலான பேசுபொருளாக மாறியிருந்தது. இந்நிலையிலேயே நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத்,

"இத்தகைய கருத்துக்கள் வெறும் அரசியலுக்காக வழங்கப்படும் வாக்குறுதிகளாகும். அவற்றுக்கு உத்தியோகபூர்வமான எந்த முக்கியத்துவமும் இல்லை.

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. இது இலங்கையிலுள்ள ஒரு தீவாகும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை. தற்போது தென்னிந்தியாவில் தேர்தல் காலமாகும். எனவே, வேட்பாளர்கள் வாக்குகளைப் பெறுவதற்காக பல்வேறு அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் தேர்தல் மேடைகளில் இதே போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த அறிக்கைகள் எதுவும் எந்த மாற்றத்துக்கும் இட்டுச் செல்லவில்லை.

விஜய் தனது கருத்தை ஒரு பிரசாரக் கூட்டத்தின் போது வெளியிட்டார். அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மத்திய அரசிடமிருந்தோ அல்லது இராஜதந்திர வழிகளிலோ எந்தக் கோரிக்கையும் விடுக்கப்படவில்லை.

நேற்று, இன்று மற்றும் நாளை கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதியாகவே இருக்கும்." – என்றார்.

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஏன் இன்னும் வெளியிடப்படவில்லை" என்று வினவியபோது, "அந்த ஒப்பந்தங்கள் தற்போது நீதித்துறை மதிப்பாய்வில் உள்ளன." – என்று குறிப்பிட்டார்.

"அந்த ஒப்பந்தங்கள் தொடர்பாக ஒரு நீதிமன்ற வழக்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே, சட்ட செயல்முறை முடிவடையும் வரை காத்திருப்போம்." – என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# ரணிலை விடுவிக்குமாறு அரசுக்கு இராஜதந்திர அழுத்தம் வரவில்லை

## கைது அரசியல் பழிவாங்கல் இல்லை என்றும் அமைச்சர் விஜித தெரிவிப்பு



"பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை எவ்வாறு அரசியல் பழிவாங்கலாகும்? இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். எந்தவொரு இராஜதந்திரியோ அல்லது இராஜதந்திர நிறுவனமோ ரணிலை விடுவிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை."

– இவ்வாறு சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"ஜனாதிபதி ஒருவர் உள்நாட்டுக்குள் மரண வீடொன்றுக்குச் செல்வதற்கும் வேறு இடங்களுக்குச் செல்வதற்கும் வெளிநாடொன்றுக்குப் பிரத்தியேக விமானத்தில் செல்வதற்கும் வேறுபாடு உண்டு.

எனவே, இவை இரண்டையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த முடியாது. அரச உத்தியோகத்தர்களுக்குக் கூட அரச வாகனங்களைப் பயன்படுத்துவதற்குச் சில வரைமுறைகள் காணப்படுகின்றன. சுற்றறிக்கை ஊடாகவும் அது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலாகும்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இது தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார்.

பின்னர் வழக்கு விசாரணைகளின் போது மருத்துவக் காரணிகள் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு பிணை வழங்குவதற்கும், சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் ஊடாகவே தீர்மானிக்கப்படும். இது தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றன என்று எண்ணுபவர்கள் மேன்முறையீடுகளின் ஊடாகவும் தமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படவில்லை. அதிகாரத்தின் அடிப்படையில் சட்டம் வேறுபாட்டுடனேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது அவ்வாறான நிலைமை இல்லை என்பது இந்த வழக்கின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். எனவே, இது அரசியல் பழிவாங்கலோ, தனிப்பட்ட பழிவாங்கலோ அல்லது ஏகாதிபத்திய அரசமைப்பு நடைமுறையோ அல்ல.

அரசமைப்பு ரீதியிலான ஏகாதிபத்தியத்துக்குச் செல்வதெனில் முதலில் அரசமைப்பில் அதற்கமைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். 2020இல் அவ்வாறான நிலைமைகள் காணப்பட்டன.

இதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமை அரசுக்கு எந்த வகையிலும் சவால் அல்ல. இவர்கள் அனைவரும் யார் என்பதை மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பர். எனவே, இது எமக்கு மகிழ்ச்சியான விடயமே.

விசாரணைகளுக்கமையவே சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். இந்த வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனை குறித்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்கும்.

பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை சட்டத்தை மீறும் செயலாகும். அது எவ்வாறு அரசியல் பழிவாங்கலாகும்? பொதுச் சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக தகுதி தராதரம் பாராமல் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

எந்தவொரு இராஜதந்திரியோ அல்லது இராஜதந்திர நிறுவனமோ ரணிலை விடுவிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. ஒரு சில நபர்களே அவ்வாறு தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்." – என்றார்.

# மருந்துகளுக்கான விலைப் பொறிமுறையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அனுமதி



மருந்துகளுக்கான விலை குறித்தல் பொறிமுறையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அதிகபட்ச உச்சவரம்பு விலைக்கான, விலை குறித்தல் பொறிமுறையை அறிமுகப்படுத்தி 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மருந்து ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்குவிதிகள் 2446/34 மற்றும் 2025.07.21 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டன.

அதற்கமைய இதனை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலவுக்கு அரச நிதியைப் பயன்படுத்துவது தப்பென்றால், உள்நாட்டில் ஜனாதிபதி ஒருவர் தன்னுடைய சொந்த தேவைகளுக்கான பயணங்களுக்கு அரச வாகனங்களையும் பாதுகாப்பு தரப்பினரையும் பயன்படுத்துவது அரசு சொத்தை துஷ்பிரயோகம் செய்வதாகாதா?" – என்று பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்.

அமைச்சரவை பேச்சாளர் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் திக்குமுக்காடி சமாளிக்க வேண்டியவரானார்.

"நாட்டுக்குள் ஒரு மரண வீட்டுக்கோ அல்லது இன்னொரு நிகழ்வுகோ பயணம் செய்வதை வெளிநாட்டுக்கு பயணத்தோடு ஒப்பிட முடியாது" – என்று கூறிச் சமாளித்தார் அமைச்சர்.

ஆக, அவரின் தத்துவத்தின்படி – அவரின் அரசினுடைய கருத்தின்படி – சட்டம் யாவருக்கும் சமம். அதாவது ஆளாளுக்கு அது மாறாது. ஆனால் அதே சட்டம் ஆளாளுக்கு ஏற்ப விடயத்தைப் பொறுத்து மாறுபடும் என்பதுதான் போலும்.

என்ன விசித்திரமான விளக்கம்...!

+ + +

செம்மணி புதைகுழியில் நேற்று முன்தினம் 16 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டமையுடன் இலங்கையில் இரண்டாவது பெரிய மனிதப்புதைகுழி என்ற பெயரை செம்மணியில் தற்போது அகழப்படும் புதைகுழி பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை அகழப்பட்ட மனிதப் புகைகுழிகளில் மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழியே மிகப்பெரியது. அங்கு 28 சிறார்கள் உட்பட 378 பேரின் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்போது 169 என்புக் கூடுகள் மீட்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி இரண்டாவது இடத்தில் இருக்கின்றது.

இதுவரை இரண்டாவது இடத்தில் இருந்து இப்போது மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருப்பது 2013இல் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகில் 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழி ஆகும்.

கொழும்பு துறைமுகப் பகுதியில் 88 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட மனிதப் புதைகுழி நான்காவது இடத்தில் உள்ளது.

அதேபோல திருக்கதீஸ்வரம், மன்னாரில் 82 பேரின் எலும்புகள் 2013 இல் மீட்கப்பட்ட பகுதி ஐந்தாவது பெரிய மனிதப் புதைகுழியாகக் கருதப்படுகிறது.

கொக்குத்தொடுவாயில் 52 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட மனிதப் புதைக்குழி ஆறாவது இடத்தில் உள்ளது.

+ + +

'மலையைக் கெல்லி எலியை பிடிப்பது' என்பார்கள். இப்படி ஒரு கொள்ளைக் கும்பலை சல்லி போட்டுத் தேடி மடக்கி இருக்கின்றனர் கொழும்பு வெள்ளவத்தைப் பொலிஸார்.

கடந்த 15 ஆம் திகதி அதிகாலை 4.25 மணிக்கு ஒரு பெண் மருத்துவர் பஸ்ஸ/க்காகத் தரிப்பிடத்தில் காத்திருந்தபோது, கூரான ஆயுதத்தைக் காட்டி சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை கொண்ட அவரது கைப்பையை ஒரு குழு கொள்ளை அடித்துக் கொண்டு ஸ்கூட்டியில் தப்பிச் சென்று இருக்கின்றது.

கடந்த பத்து நாள்களாக சுமார் 73 கிலோ மீட்டர் தூர வீதியில் பொருத்தப்பட்டிருந்த 500க்கும் மேற்பட்ட சிசிடிவி கமராக்களை மினக்கெட்டு அவற்றின் பதிவுகளை ஒவ்வொன்றாக அவதானித்து, அந்தக் கொள்ளை கூட்டத்தின் நகர்வைதுல்லியமாககவனித்துஇருக்கின்றது வெள்ளவத்தைப் பொலிஸ் குழு. அதன் அடிப்படையில் அவிசாவளையைச் சேர்ந்த 44 வயது ஒருவரையும், எகலியகொடையைச் சேர்ந்த 40 வயது நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். கொள்ளையிடப்பட்ட பொருள்களில் கணிசமான பகுதி மீட்கப்பட்டிருக்கின்றது. எஞ்சிய பொருள்களுடன் தலைமறைவாகி இருக்கும் மூன்றாவது நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

## நாட்டுக்காக நாங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று புதன்கிழமை சந்தித்து நலம் விசாரித்த பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசால் மக்களின் பிரச்சினைகளுக்குப் பதில்களையும் தீர்வுகளையும் பெற்றுத் தர முடியாது போயுள்ளது. 40 ஆயிரம் பட்டதாரிகள் தொழிலின்றி வீதியில் நிற்கின்றனர். நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் உட்பட காய்கறிகள் மற்றும் பழச் செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் கூட உதவியற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

தற்போது நாட்டின் 50 வீத மக்கள் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர். 71 வீதமான மக்கள் அஸ்வெசும நிவாரணம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கூட போதிய வசதிகள் இல்லை. தர்மாச்சாரியப் பரீட்சையில் சித்தி பெற்ற 14 ஆயிரம் பேருக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் பதில்களையும் இந்த அரசால் பெற்றுக்கொடுக்க முடியாது போயுள்ளது.

பொருள்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் "பராட்டே" சட்டம் காரணமாக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சகலரையும் ஒன்றிணைத்துக் கொண்டு இந்தக் கேள்விகளுக்குப் பதில்களைத் தேட வேண்டும். இவை வெறுமனே குறுகிய அரசியல் நோக்கங்களைக் கருத்தில் கொண்டவை அல்ல.

ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் பணியாளர் குழுமப் பிரதிநிதிகளை இன்று (நேற்று) சந்தித்தேன். இந்தச் சந்திப்பில் நாட்டுக்காக வேண்டுகோரிக்கையொன்றை முன்வைத்தேன்.

நமது நாட்டின் ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா விதித்த 44 வீதத் தீர்வை வரியை பின்னர் 30 வீதமாகவும், அதனைத் தொடர்ந்து 20 வீதமாகவும் குறைத்தது. முடியுமானால், இந்தத்தீர்வை வரியை மேலும்குறைக்குமாறும்,முடிந்தால்தீர்வை வரியை முழுமையாக நீக்குமாறும் கோரினேன்.

ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தப் பணிக்குழாத்திடம் அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் இந்தக் கோரிக்கையை முன்வைத்தேன்." – என்றார்.

## பாணந்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணியில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

8 எலும்புக்கூடுகள் நேற்று முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி ழங்கியுள்ள நிலையில் நேற்று 35 ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

கட்டம் கட்டமாக இதுவரையில் 43 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, மொத்தமாக 169 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 158 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

## சி.ஐ.டியின் வலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதியன்று ஊடக சந்திப்பொன்றில் முன்னாள் அமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பான முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஊடக சந்திப்பில், உதய கம்மன்பில சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச் சிதைக்கக்கூடிய கருத்துக்களைத் தெரிவித்தார் என முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மன்றுரைத்துள்ளனர்.

இந்தநிலையில் அந்தக் கருத்துக்கள் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ், குற்றமாகுமா என்பதைத் தீர்மானிக்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்.



# மேலும் வலுவடைந்த தேங்காயின் உற்பத்தி

2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இலங்கையின் தேங்காய் உற்பத்தி மேலும் வலுவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தை விட 2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தேங்காய் உற்பத்தியில் 18 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, இலங்கை உள்ளிட்ட பல்வேறு கிழக்காசிய நாடுகளில் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

சீரற்ற வானிலை, நோய் நிலைமை உள்ளிட்ட ஏனைய காரணிகளால் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

இந்தநிலையில், 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், உள்நாட்டு தேங்காயின் விலை 18.32 சதவீதம் அதிகரித்துள்ளதாகத் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# வாகன விபத்துக்கள் காரணமாக இந்த வருடத்தில் 1,778 பேர் பலி

## பொலிஸ் பேச்சாளர் தகவல்



கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல், மரணங்களை ஏற்படுத்திய 1,682 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளன என பொலிஸ் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ.வுட்லர் தெரிவித்தார்.

இந்த விபத்துக்களில் 1,778 பேர் உயிரிழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், 3,428 பாரியளவான வாகன விபத்துக்களும், 6,241 சிறியளவான வாகன விபத்துக்களும் இந்த காலப்பகுதியினுள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பமானது

காணியற்ற குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காணி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது.

இதன் முதற்கட்டம் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுவதாக காணி ஆணையாளர் நாயகம் சந்தன ரணவீர ஆராச்சி தெரிவித்துள்ளார்.

முதற்கட்டத்தில் 4,000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் காணியற்ற குடும்பங்களை கண்டறிந்து அவர்களுக்கு காணி உரிமையை வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமென காணி ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



# பொது இடங்களில் வெற்றிலை எச்சில் உமிழ்பவர்களுக்கு அபராதம் விதிப்பு

பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

பஸ் தரிப்பிடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் வெற்றிலை எச்சில் உமிழப்படுகின்றமை தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட உரிய அரச நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், பொது இடங்களில் வெற்றிலை எச்சிலை உமிழ்பவர்களுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் சட்ட நடவடிக்கையை எடுக்க தீர்மானித்துள்ளது.

வெற்றிலை எச்சிலை பொது இடங்களில் உமிழ்பவர்களுக்கு எதிராக குறைந்தபட்சம் 3,000 ரூபாவும் அதிகபட்சமாக 25,000 ரூபாவும் அபராதமாக விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

குறிப்பாக பஸ் சாரதிகள், மற்றும் வாகன சாரதிகள் வாகனங்களை செலுத்தும் போது வெற்றிலை எச்சிலை பாதைகளில் உமிழ்துச் செல்வதாக பொது சுகாதார பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விரைவில் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்துள்ளனர்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட பகுதி புனரமைப்பு



கொட்டாவைக்கும் தொடங்கொடவிற்கும் இடையிலான 19ஆவது கிலோமீற்றரிலிருந்து 44ஆவது கிலோ மீற்றர் வரையிலான தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை புனரமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, தெரிவு செய்யப்பட்ட குறைந்த ஏலதாரரான Maga Engineering Pvt நிறுவனத்திற்கு உரிய ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்த பகுதியிலுள்ள வீதிகள் சமீப காலமாக உடைந்து காணப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்புணர்ந்து செயற்படுக!

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேரில் பார்வையிடக் கூடும் என்ற தகவலை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருக்கின்றார். எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில், அச்சமயம் அவர் செம்மணி மனிதப் புதைக்குழியைப் பார்வையிட வாய்ப்புள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

செம்மணி மனிதப் புதை குழியில் புதையுண்டு போன நம் அவலங்களை முழு அளவில் வெளிக்கொணர்வதற்கான தந்திரோபாயத்தோடு இந்த விடயத்தை நாம் அணுக வேண்டும்.

வெறுமனே உணர்ச்சிப் பெருக்கில் 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று போட்டடித்து நடந்து கொள்வதோ, உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கான எழுச்சிகளை மட்டும் முன்னிறுத்தி செயல்படுவதோ பொருத்தமற்றவை.

செம்மணி புதைக்குழி விவகாரத்தை ஒட்டி மிகவும் திட்டமிட்டு, நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்ட 'அணையா விளக்கு' போராட்டத்தை ஒரு சில பிரகிருதிகள் அவசரப்பட்டு நடந்து கொண்டு, போராட்டத்தின் தாற்பரியத்திற்கே முரணான விதத்தில் செயற்பட்டுக் குழப்பியமை போல இந்த விடயத்தை நாம் கையாளக் கூடாது.

ஆழ யோசித்துப் பலன் தரும் வகையில் இந்த விடயத்தை எதிர்கொண்டு முன்நகர்த்த வேண்டும்.

சரியோ, பிழையோ இன்றைய கால கட்டத்தில், செம்மணி புதைகுழியில் புதையுண்டு போன அவலங்களை உரிய முறையில் வெளிக்கொணர்வதற்கு என்ற வகையில் சிங்கள அரசுத் தரப்பின் பங்களிப்பையும் இயன்றவரைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதுதான் இப்போதைய நிலையில் புத்திசாலித்தனமானதாக இருக்கும்.

செம்மணி புதைகுழி உட்பட தமிழர் தேசம் மீது பெரும் கொடூரங்களைப் புரிந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுக் கட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்தான் நாட்டின் ஜனாதிபதி. ஆகவே தமிழினத்திற்கு எதிராக சிங்கள தேசம் புரிந்த கொடூரங்களின் சினத்தை அந்த நாட்டின் தலைவருக்கு எதிராகக் குறியீட்டு ரீதியாக நாம் காட்ட வேண்டும் என்பது எப்போதும் நியாயமாக இருந்தாலும், இப்போது எங்கள் பக்கத்தில் புதையுண்டு போன அவலங்களை சர்வதேசத்தின் முன் முழுமையாகக் கொண்டு வருவதற்கு, உணர்வுகளுக்கு அப்பால் - கோபதாபங்களுக்கு அப்பால் - உணர்ச்சி சீற்றத்துக்கு அப்பால் - தந்திரமாகவும் புத்திசாதுரியமாகவும் பயன் தக்க வகையிலும் நாம் அணுக வேண்டும்.

ஆகவே இது போன்ற விடயங்களை கையாள்வது தொடர்பில், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் கூடிப் பேசி ஒரு முடிவு எடுக்க முன்னர், எந்த தரப்பும் அவசரப்பட்டு ஒரு நிலைப்பாட்டை எடுத்து, அறிவித்து, இவ்விடயத்தைத் தந்திரமாகக் கையாளும் வாய்ப்பைக் குழப்பிவிடக் கூடாது. செம்மணி போன்ற விடயங்களைக் கையாள தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் ஏற்கனவே ஒன்றுபட்டு நிற்கும் இச்சூழலில், இவ்விடயத்தை கையாளும் முறைமையை வகுக்கின்ற பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்துப் பார்த்திருப்பதுதான் சிவில்சமூகக்கட்டமைப்புகள்உட்பட அனைத்து தரப்பினரினதும் கடப்பாடாக இருக்க வேண்டும்.



# ட்ரம்ப் 4 முறை தொலைபேசியில் அழைத்தும் பேச மறுத்தார் இந்திய பிரதமர் நரேந்திர மோடி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நான்கு தொலைபேசி அழைப்புகளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தவிர்த்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனைத் தளமாகக் கொண்டு இயங்கும் செய்தித்தாள் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான 25 வீத கூடுதல் வரி நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

எனவே இதனைக் கருத்தில்கொண்டு அவர் தொலைபேசி அழைப்புகளை நிராகரித்திருக்கலாம் என கூறப்படுகிறது.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ‘செல்பி’ எடுத்தார் ராகுல்காந்தி



பீகாரில் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி நடத்தி வரும் வாக்காளர் உரிமை யாத்திரையில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று பங்கேற்றார்.

பீகாரில் சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இந்த நிலையில் திடீரென வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் என்ற முகாம்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது. இந்த சிறப்பு முகாமில் ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவை குடியுரிமை ஆவணங்களாக ஏற்கப்படவில்லை. இதனால் 65 லட்சம் வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பீகாரில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட இந்த நடவடிக்கை கடும் எதிர்ப்புக்குள்ளாகி இருக்கிறது. இந்த விவகாரத்தை முன்வைத்து நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் முடக்கின. உச்சநீதி மன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன.

இதனிடையே பீகாரில், ‘வாக்காளர்களின் உரிமை யாத்திரை’யை கடந்த 17ஆம் திகதி ராகுல் காந்தி தொடங்கினார். ராகுலின் இந்த யாத்திரையில் பல லட்சக்கணக்கான பொதுமக்கள் அலை அலையாக பங்கேற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பேரணியின் நிறைவுநாளான இன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திமுக தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் பங்கேற்றுள்ளார்.

பீகாரில் விரைவில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு சிறப்பு வாக்காளர் பட்டியல் தயாரிப்புக்குஎதிர்ப்புதெரிவித்தும்,வாக்குதிருட்டை கண்டித்தும் மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல்காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ‘வாக்காளர் உரிமை யாத்திரை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பீகாரில் வாக்காளர் உரிமை யாத்திரையின்போது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி செல்பி எடுத்துக்கொண்டார்.

இதுதொடர்பான புகைப்படத்தைதனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள ராகுல் காந்தி,

“எனது சகோதரர் மு.க.ஸ்டாலினை பீகாருக்கும், வாக்காளர் அதிகார யாத்திரைக்கும் வரவேற்கிறேன். பீகாரிலும் முழு நாட்டிலும் வோட் சோரிக்கு எதிரான எங்கள் போராட்டத்தை உங்கள் வருகை மேலும் வலுப்படுத்துகின்றது” எனக் குறிப்பிட்டுள்ளார்.










# பள்ளியில் துப்பாக்கிச் சூடு; 2 குழந்தைகள் உயிரிழப்பு

அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரில் உள்ள ஒரு பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 2 குழந்தைகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.

மினசோட்டா மாகாணத்தில் உள்ள மினியாபோலிஸ் நகரில் இயங்கி வரும் ஒரு கத்தாலிக்க பள்ளியில் இந்த துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

395 குழந்தைகள் படிக்கும் இந்த பாடசாலையில் நுழைந்த மர்ம நபர் ஒருவர், பாடசாலையில் உள்ள தேவாலயத்தில் குழந்தைகள் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஜன்னல் வெளியாக திடீரென குழந்தைகளை நோக்கி சரமாரியாக சுடத் தொடங்கியுள்ளார்.

ரைபிள், ஷாட்கன், பிஸ்டல் உள்ளிட்ட துப்பாக்கி ரகங்களை கொண்டு அவர் இந்த தாக்குதலை நடத்தினார் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 8 மற்றும் 9 வயதுடைய இரண்டு குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். 17 குழந்தைகள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 7 குழந்தைகள் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த தாக்குதலை நடத்திய நபரும் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மினசோட்டாவில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து தனக்கு முழுமையாகத் தெரிவிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர்,

“எஃப்.பி.ஐ விரைவாக செயல்பட்டு, சம்பவ இடத்துக்கு சென்றுள்ளனர். இந்த பயங்கரமான சூழ்நிலையை வெள்ளை மாளிகை தொடர்ந்து கண்காணிக்கும். சம்பந்தப்பட்ட அனைவருக்காகவும் என்னுடன் இணைந்து பிரார்த்தனை செய்யுங்கள்” என்று தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரின் பெயர் உள்ளிட்ட விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை என்றாலும் சமூக வலைதளங்களில் அவரை பற்றி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலை நடத்திய நபரின் பெயர் ராபின் வெஸ்ட்மேன் என்றும், 20 வயது நபரான இவர் இந்த துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடுவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட தேவாலயம் குறித்த தகவல்களை தனது யூடியூப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. எனினும் இவற்றை இன்னும் மினியாபோலிஸ் அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை.





# ஈரான் மீதான ஐக்கிய நாடுகளின் தடை; 30 நாள்கள் அவகாசம் வழங்கப்படலாம்

ஈரான் மீது ஐக்கிய நாடுகளின் தடைகளை மீண்டும் விதிக்கும் செயல்முறையை, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஆரம்பிக்கவுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் தம்மை நம்பவைக்கும் வகையில், செயற்படுவதற்கு ஈரானுக்கு 30 நாள்கள் அவகாசம் வழங்கப்படலாம் என்றும் ராஜதந்திரிகளை கோடிட்டு செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தக்காலப்பகுதிக்குள் தெஹ்ரான் தனது அணுசக்தி திட்டம் குறித்த உறுதிமொழிகளை வழங்கும் என்று குறித்த இராஜதந்திர தரப்புக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

முன்னதாக மூன்று ஐரோப்பிய இராஜதந்திரிகளும் ஒரு மேற்கத்திய இராஜதந்திரியும் நேற்று முன்தினம் ஈரானுடன் பேச்சுவார்த்தையை நடத்திய போதும், ஈரான் உறுதியான உறுதிமொழிகளை வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவில் பஸ் விபதது; மாணவி உயிரிழப்பு, 11 பேர் காயம்




அவுஸ்திரேலியாவில் பாடசாலை பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இந்த விபத்தில் 11 பேர் வரை காயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

மேற்படி பஸ்ஸில 28 மாணவர்கள் பயணித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பிலான விசாரணைகள் மும்முரமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.





# வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், தவிசாளர்களுடன் கலந்துரையாடல்

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், தவிசாளர்களுடனான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி எச்.எம்.எச்.அபயரத்தன, பிரதி அமைச்சர் பி.ருவான் செனரத் ஆகியோரின் பங்கேற்புடன் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

பதில் பிரதம செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கலந்துரையாடலில் பங்கேற்றவர்களை வரவேற்றார். தொடர்ந்து வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, உள்ளூராட்சி மன்றங்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தினார்.

அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களால் தமது சபைகளின் தேவைப்பாடுகள், சவால்கள் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கட்டடங்கள், வாகனங்கள், கனரக வாகனங்கள், வீதி மின்விளக்குகள் பொருத்துவதற்கான அனுமதி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையால் இலங்கையில் ஏனைய மாகாணங்களில் ஒருவிதமான நடைமுறையும் வடக்கு மாகாணத்தில் வேறொரு விதமான நடைமுறையும் பின்பற்றப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டது.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட வீதிகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்போது சபைகளுக்குத் தெரியப்படுத்தி அதனை முன்னெடுக்குமாறும் கோரினர். உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக சபைகளின் வருமானத்தில் சம்பளம் வழங்குவது தொடர்பான விடயத்தில் தளர்வு தேவை எனவும் சபைகளின் தவிசாளர்கள் வலியுறுத்தினர்.

இதன் பின்னர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி எச்.எம்.எச்.அபயரத்தன மற்றும் பிரதி அமைச்சர் ருவான் செனரத் ஆகியோர் பதிலளித்து கருத்துத் தெரிவித்தனர்.

மக்களின் அபிவிருத்தியே தமது எதிர்பார்ப்பும் என்றும்

தொடர்ச்சி▼













# வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், தவிசாளர்களுடன் கலந்துரையாடல்

தொடர்ச்சி▲

அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் கோரினர். இவ்வளவு பிரச்சினைகளுக்கும் மத்தியில் சேவைகளைச் செய்வதற்காக பாராட்டுவதாகவும் குறிப்பிட்டனர். மேலும், இலங்கை முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேவைப்பாடுகள், கோரிக்கைகள் ஒன்றாகவே உள்ளன எனவும் அவற்றை படிப்படியாக நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தனர். எதிர்காலத்தில் இன்று முன்வைத்த பிரச்சினைகள் பாதியாகக் குறைந்துவிடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் மேயர்கள், தவிசாளர்கள், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.












தமிழகத்தின் புகழ்பெற்ற
PSR SILK SAREES
நிறுவனத்தின் ஆதரவுடன்
இலங்கை யாழ்ப்பாணத்தில்
இரு இடங்களில்
மணிமேகலைப் பிரசுரத்தின்
புத்தகக் கண்காட்சி!
28.08.25 வியாழன் காலை 11.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கேட்போர் கூடம்
30.08.2025, சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில்
இலங்கையில் ரவி தமிழ்வாணனின்
தொடர்பு கைபேசி : 0094 743 171 971
வாட்ஸ் அப்: 98415 44187
இந்த இனிய புத்தக கண்காட்சிக்கு சுற்றமும் நட்புமாக கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கும்
முனைவர் ரவி தமிழ்வாணன்
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம்
மணிமேகலைப் பிரசுரம்
எண் 21, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி: 044-24342926, 24346082, 91764 51934
மின் அஞ்சல்: manimekalaiprasuram@gmail.com
இணையதளம்: www.tamilvanan.com
28.08.25 வியாழன் காலை 11.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கேட்போர் கூடத்தில்
புத்தக வெளியீட்டு விழாவும்! புத்தகக் கண்காட்சியும்!!
நிகழ்ச்சி நிரல்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை: முனைவர் திரு. ரவி தமிழ்வாணன்
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17
தலைமை: திரு. சற்குண ராஜா
துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்
சிறப்புரை: திரு. சாய் முரளி
இந்தியத் துணைத் தூதர், யாழ்ப்பாணம்
முன்னிலை: திரு. சிவா
தமிழ்ப் பற்றாளர், சியாட்டில் நகரம், அமெரிக்கா
திரு. சௌந்திரராஜ்
புத்தக நேசர், வாசகர், பாண்டிச்சேரி
வாழ்த்துரை: திரு. சரவணபவன்
மேனாள் எம்பி உதயன் நாளிதழ் நிறுவனர்
திரு. கீர்த்திசிங்கம்
லண்டன் எழுத்தாளர், அச்சுவேலி
ஞானச்சிறபி மாஸ்டர் திரு. சஹாநாதன்
சிறந்த எழுத்தாளர், சென்னை
திரு. மகேந்திரன் ஜதீஸ்
எழுத்தாளர், யாழ்ப்பாணம்
கண்காட்சி ஏற்பாட்டில் உதவி
திரு. முகுந்தன்
திரு. நிவாஸ்
30.08.2025 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில்
மணிமேகலை பிரசுரம் புத்தக விற்பனை கண்காட்சி
நிகழ்ச்சி நிரல்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை
முனைவர் திரு. ரவி தமிழ்வாணன்
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம், சென்னை
கண்காட்சியைத் திறந்து வைத்து சிறப்புரை
மதிப்பிற்குரிய திரு. சாய் முரளி அவர்கள்
இந்தியத் துணைத் தூதர், யாழ்ப்பாணம்
முன்னிலை
திரு. சௌந்திரராஜ்
புத்தக நேசர், வாசகர், பாண்டிச்சேரி
வாழ்த்துரை
திரு. வித்யாதரன்
ஆசிரியர், காலை முரசு
திரு. மகேந்திரன் ஜதீஸ்
எழுத்தாளர், யாழ்ப்பாணம்




# முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது விவகாரம்:

# தன் கருத்துக்குத் தவறான தலைப்பிட்டமைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் விசனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்குத் தாம் தெரிவித்திருந்த கருத்தைத் திரிவு படுத்தி, மக்கள் மத்தியில் தவறான மனப்பதிவை ஏற்படுத்தும் விதத்தில் ஒரு யூடியூப் தளத்தினர் தவறாகத் தலைப்பிட்டிருந்தமையைச் சுட்டிக்காட்டியுள்ள ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அதையிட்டு விசனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் குழுவில் தற்பொழுது இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாகச் சென்றிருக்கும் அவர், இவ்வாறு நீதித்துறையின் சுதந்திரத்தை கொச்சைப் படுத்தும் வகையில் திரிவு படுத்தி செய்தி வெளியிடுகின்றமையைக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டமுதுமாணி ரவூப் ஹக்கீம் பின்வரும் விளக்கத்தை வெளியிட்டுள்ளார்:-

பிரஸ்தாப யூடியூப் தளத்தில், "சட்டம் அனைவருக்கும் சமம்தான். ஆனால், அவர் அவ்வாறு நடத்தப்பட்டிருக்கக் கூடாது" என்று நான் கூறும் தோரணையில் தலைப்பிடப்பட்டிருந்தது.

"சட்டத்தின் முன் யாவரும் சமம்" என்ற கோட்பாடு அனைவருக்கும் பொதுவானது. ஆனால், மிகப் பாரதூரமான கிரிமினல் குற்றவாளியொருவர் போன்று அவர் நடத்தப்பட்டிருக்கக் கூடாது. நிலைமை இவ்வாறிருக்க, உண்மைக்குப் புறம்பாகக் கூறக்கூடாது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவரை நடத்திய விதம் குறித்துத்தான் நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். அவர்கள் அவரை உடனடியாக கைது செய்து, நீதவானிடம் கொண்டு சென்றிருக்கக்கூடாது. அதற்குப் பதிலாக,சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால், அத்துடன் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால், குற்றம் நடந்திருப்பது உரிய முறையில் கண்டறியப்பட்டிருந்தால், அவற்றை "பி" (ஐ) அறிக்கையொன்றின் மூலம் நீதவானிடம் சமர்ப்பித்து, அழைப்பாணை விடுக்குமாறு கோரும் வாய்ப்பு உள்ளது. அதனைப் பரிசீலித்து நீதிவான், மன்றில் ஆஜர் ஆவதற்கு உரிய உத்தரவைப் பிறப்பித்திருப்பார். அது, முன்னாள் ஜனாதிபதியின் வழக்கறிஞர்கள் நீதவானிடம் அவரை முன்னிலைப்படுத்தி, பிணை கோருவதற்கும் சில நாள்கள் அவகாசத்தை அளித்திருக்கலாம்.

அவ்வாறன்றி,திட்டமிட்டவகையில் அவரை அவமானப்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தான் நாங்கள் எதிர்த்தோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டிற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர்.



இந்த விருப்பத. தெரிவு நிர்வாகக் கட்டமைப்பின் ஓர் அங்கமாக இயங்கிவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் இருக்கத்தக்கதாக, அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்த உடனேயே அவரைக் கைது செய்ததன் மூலம் அவர்கள் தங்கள் துணிச்சலை வெளிக்காட்ட எதிர்வினையாற்றியிருக்கின்றனர். அவரை உடனடியாகக் கைது செய்ய அவர்கள் அவசரப்பட்டமை தேவையற்றது என்றுதான் நான் கூறியிருந்தேன்.

அது முற்றிலும் நிர்வாக ரீதியான விருப்பத் தெரிவு. நீதித்துறையின் முடிவு அல்ல. நீதிமன்றத்தைக் குறை கூறுவதைத் தவிர்க்க, அவசியமான தெளிவுடன் நான் அதனைக் குறிப்பிட்டிருந்தேன்.

காவல்துறைக்குள்ள இவ்வாறான விருப்பத் தெரிவுகளை சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள், முன்னர் பிணை வழங்காததற்காக நான் நீதித்துறையை விமர்சித்தேன் என்சொ பொருள்பட கருதியிருக்கின்றனர். நான் அவ்வாறு சொல்லவில்லை என்பது மிகவும் தெளிவான விஷயமாகும். - என்றுள்ளது.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கண்ணீர் மல்க நீதி வேண்டி கவன ஈர்ப்பு ஊர்வலம்








**(கி.வசந்தன்)**

வடக்கு – கிழக்கு தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தினர் கண்ணீர் மல்க நீதி வேண்டி வவுனியாவில் கவனவீர்ப்பு ஊர்வலத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்கள் 3,111 வது நாளான நேற்று இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் தேங்காய் உடைத்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மணிக் கூட்டுச் சந்தி வழியாக ஏ9 வீதியை அடைந்து அவர்களுடைய போராட்ட கொட்டகையை வந்தடைந்தது.

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றி யத்தின் கொடிகளை தாங்கியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை தாங்கியவாறும் ஊர்வலத்தில் ஈடுபட்ட தாய்மார் அங்கு கோஷங்களை எழுப்பி கண்ணீர் மல்ல ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் தமது போராட்டத் தினை நிறைவு செய்தனர்.





















# திருமுறிகண்டி பிரதேசத்தில் வருகின்றது அரியாத்தை பாரம்பரிய சைவ உணவகம்!

## முல்லைத்தீவு தயாரிப்புக்களின் விற்பனை நிலையமும்





(பா.சதீசன்)

முல்லை மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமூக நலனோம்பல் திட்டத்தின் கீழ் கனேடிய தமிழர் பேரவையின் அனுசரணையுடன் வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள புனிதப்பிரதேசமான திருமுறிகண்டி பகுதியில் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் நலன் கருதியும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் இந்து மாமன்ற வன்னி அலுவலகத்தில் அமைந்துள்ள உணவக கட்டடத்தில் "அரியாத்தை பாரம்பரிய சைவ உணவகம்" எனும் பெயரில் தமிழர் பாரம்பரிய உயர்தரமான சைவ உணவகம் வருகிறது.

அத்தோடு 'Made in Mullaitivu' எனும் பெயரில் முல்லைத்தீவு உட்பட வடக்கு பிரதேச உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் முல்லைத்தீவு தயாரிப்புக்களின் விற்பனை நிலையமும் அங்கு அமைய இருக்கின்றது.

இந்த இரு நிலையங்களையும் அமைப்பதற்குரிய உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

முல்லை மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனது பங்குபற்றுதலுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவி திருமதி. அபிராமி கைலாசபிள்ளை, வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர் பிரதீபன் ஆகியோருக்கிடையில் பாரம்பரிய சைவ உணவகம் மற்றும் முல்லைத்தீவு தயாரிப்புக்களின் விற்பனை நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கு கட்டடத்தை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவற்கு நேற்று ஆவணி விநாயகர் சதுர்த்தி நன்னாளில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதித் தலைவர் சி.தனபாலா, பொருளாளர் குசேலகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# புத்தளத்தில் டிப்பர் விபத்தில்!

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் பகுதியில் டிப்பர் லாரி ஒன்று சாலையை விட்டு விலகி அதி சக்தி கொண்ட பாரந்தூக்கி வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்றதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது அருகில் இருந்த பிரதான மின் கம்பத்துக்கும் சேதமேற்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.






# உள்ளூராட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்களை மதித்துச் செயற்படுவதும் அபிவிருத்திக்கு அவசியம்

## உள்ளூராட்சி அமைச்சரிடம் தவிசாளர் நிரோஷ் எடுத்துரைப்பு

‘கிளின் சிறிலங்கா’ திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் மீறப்படுகின்றன. அதிகாரப் பகிர்வு மற்றும் மனித உரிமைகள் பேணப்படுகின்றமை கூட அபிவிருத்தியின் ஓர் அங்கமாகும். எனவே அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் வாயிலாக மீறக்கூடாது. மாறாக அபிவிருத்தியைக் காத்திரமாக்க வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபேரட்ண மற்றும் பிரதி அமைச்சர் பி ரூவான் செனரத், ஆளுநர் என்.வேதநாயகன் உள்ளிட்டவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகளை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையர் அலுவலக கேடபோர் கூடத்தில் நேற்று புதன்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினர். இச் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்களிள் ஆளணி வெற்றிடம் நாட்டின் பிறபாகங்களைக் காட்டிலும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆளணி வெற்றிடத்தை நாட்டின் ஏனைய மாகாணங்கள் தேர்தல் காலத்திற்கு முன்னரான விசேட சுற்று நிருபங்களுக்கு அமைய நியமித்துக்கொண்ட போதும் எமது மாகாணத்தில் வெளிவாரிப்பணியாளர்களாக சனசமூக நிலையங்கள் ஊடாக நியமிக்கப்பட்டிருந்தமையினால் துரதிஷ்டவசமாக எம்மால் இந் நியமனங்களுள் பயனடைய முடியவில்லை. தசாப்தக் கணக்கில் பல தொழிலாளிகள் நியமனத்திற்காக ஏங்குகின்றார்கள். இவ் விடயத்தில் அமைச்சர் அமைச்சரவைப்



பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியமனத்தை விரைவுபடுத்தக் கோருகின்றோம். தொழிலாளர்களின் பிரச்சினை என்ற வகையில் இந்த அரசாங்கம் கூடிய கவனம் எடுக்கும் என நம்புகின்றோம்.

மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்தில் எதிர்வரும் ஆண்டில் இருந்து தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் செலுத்திவரும் இருபது வீதப் பங்களிப்பை நாற்பது வீதமாக அதிகரிக்க வேண்டிய அறிவுறுத்தல் உள்ளது. இதனை எமது சபைகள் தாங்கிக் கொள்வதில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. எனவே அரசின் இக் கொள்கையில் மாற்றத்தைக் கோருகின்றோம். அதேவேளை சபைகளின் வருமானம் பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகையில் சபையின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட அளவீட்டு முறைமை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. காரணம் சபைகளின் நிலப்பரப்பு மற்றும் சனத்தொகை என்பன வேறுபட்டுள்ளன. ஆகவே சபைகளின் வருமானம் கணக்கிடப்படும் போது நிலப்பரப்பு மற்றும் சனத்தொகைக்குமான சூத்திரம் பின்பற்றப்படவேண்டும். அதுவே சரியான புள்ளிவிவரத் தரவுகளை வழங்கும். அபிவிருத்திக்கு அது அவசியமாகும்.

மேலும் உள்ளூராட்சி சேவை மூடப்பட்ட சேவையாக அமையும் போது உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களால் மக்களுக்கு ஆற்றப்படும் அரச சேவையை வினைத்திறனாக்க முடியும். உள்ளூராட்சி மன்ற தாய்ச் சட்டங்கள், நியமத்துணைவிதிகள், துணைவிதிகளை கற்றுள்ள மற்றும் அனுபவப்பட்ட உத்தியோகத்தர் குழாம் மீளவும் உள்ளூராட்சி சேவைக்குள் ஈடுபடுத்தப்படுவது சிறந்தது. அவர்களை எழுந்தமானமாக மத்திய அரசாங்கத்தின் திணைக்களங்களுக்கு இடமாற்றக் கொள்கைகளுக்குள்ளாக இடம் மாற்றுவதைத் தடைசெய்யும் தேசிய கொள்கை நாட்டில் ஏற்படுத்தப்படவேண்டும். புதிது புதிதாக உத்தியோகத்தர்கள் திணைக்களங்களில் இருந்து இடமாற்றலாகி வருவது மத்திய அரசாங்கத்தின் ஒரு திணைக்களம் போலவே உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குகின்றது.

அத்துடன் இப்போது மத்திய அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப்பரப்பில் வருகின்ற விடயங்களுக்கான செயற்பாடுகளுக்கு ஏனைய அமைச்சுக்களுக்கு நிதியை ஒதுக்கி, அவற்றின் வாயிலாக மத்திய அரசாங்கத்தின் நிர்வாக அலுவலகமான பிரதேச செயலக வாயிலாக நிதிகள் ஒதுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் பகிரப்பட்ட அதிகாரங்களை மீறப்படாது மாகாண சபை முறைமை ஊடாக உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நிதியை ஒதுக்க வேண்டும். ‘கிளீன் சிறிலங்கா’ திட்டத்தின் வாயிலாக உள்ளூராட்சி மன்றங்கள் முகாமை செய்யும் பஸ் தரிப்பிடங்களின் முடிவுகளைக் கூட மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தினர் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். - என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# அக்கரப்பத்தனை இளைஞனை 23 நாளகளாகக் காணவில்லை

**(மஸ்கெலியா நிருபர்)**

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆக்ரோவா தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலச்சந்திரன் பிரதீப் கடந்த 03.08.2025 திகதியன்று மாலை 3 மணியளவில் வீட்டிலிருந்து வெளியில் சென்றவர். காணாமல் போய் உள்ளார் என அறிவிக்கப்படுகின்றது

இவர் தொடர்பாக அக்கரப்பத்தனை பொலீஸ் நிலையத்தில் உறவினர்கள் புகார் செய்துள்ளனர். 23 நா/கள் கடந்த போதிலும் இதுவரை இவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவரின் உறவினர்கள் தொடர்ந்தும் அவரைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இது வரை எவ்வித தகவலும் அவர் தொடர்பாகக் கிடைக்கவில்லை.

தாய் உட்பட உறவினர்கள் பெரும் சோகத்தில் உள்ளனர். இவரை நேரில் யாராவது கண்டால் கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் தருமாறு பணிவுடன் உறவினர்கள் கேட்டுக் கொள்கின்றனர். தொலைபேசி இலக்கம் 0763051090, அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிய தருமாறு கேட்டுக் கொள்கிறார்கள்.






# தாயகச் செயலணியின் ஏற்பாட்டில் நேற்று வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்!

(கி.வசந்தன்)

வவுனியாவில் நீதி வேண்டி கையெமுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடமும் பன்னாட்டு சமூகத்திடமும் நீதி வேண்டி தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களில் தாயகச் செயலணி என்ற அமசிப்பினால் கையெழுத்துப் போராட்டம் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதன் இறுதி நாளான நேற்றையதினம் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இளைஞர், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவாக கையொப்பம் இட்டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.








# முத்து நகரில் நேற்று மோதல் நிலை

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முத்து நகர் விவசாய பகுதியில் நேற்று சூரிய மின் சக்தி உற்பத்திக்காக மேலும் ஒரு தனியார் கம்பெனியினர் உள் நுழைந்து வேலைத் திட்டத்தை முன்னெடுத்த நிலையில் அங்கு விவசாயிகள் மற்றும் அந்த வேலைத் திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கிடையில் வாக்கு வாதம் இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவ இடத்துக்கு இலங்கைத் துறைமுக அதிகார சபையினர் உள்ளிட்டவர்களுடன் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ள குழுவினரும் உள் நுழைந்துள்ளனர். இதனை தடுக்கச் சென்ற விவசாயிகளை தனியார் நிறுவன ஊழியர்கள் தாக்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்த முத்து நகர்ப் பகுதியில் ஏற்கனவே மக்களின் விவசாய காணிகளை அபகரித்து, தனியார் நிறுவனங்களுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கியுள்ளனர். இதனை அடுத்து அங்கு உள்ள விவசாய காணியில் சம்பந்தப்பட்டோர் திட்டத்தை ஆரம்பிக்கச் சென்ற நிலையில் இந்தக் கைகலப்பு இடம் பெற்றது.

முத்து நகர் பகுதி விவசாயிகள் தங்களின் அபகரிக்கப்பட்ட விவசாயக் காணிகளை மீட்டுத் தரக. கோரி பல போராட்டங்களை அண்மையில் முன்னெடுத்திருந்தனர்.

இவ்வாறான நிலையில் வேலை திட்டம் ஆரம்பிக்கப்படாத காணிகளில் விவசாய செய்கை மேற்கொள்ள முடியுமான நிலைக்கு ஒத்துழைப்பதாக திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் கூறியிருந்த போதிலும் தற்போது அது சாத்தியமாக வில்லை.






# குளிரூட்டப்பட்ட வசதியைக் கொண்ட இரு பஸ்கள் யாழ்ப்பாணம் சாலைக்கு

## கொழும்புக்கான சேவையில் ஈடுபடுவதற்காக

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணம் சாலைக்கு இரண்டு குளிரூட்டப்பட்ட பஸ்கள் மீள் பயன் பாட்டுக்கு திருத்தப்பட்டு கையளிக்கப் பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலை யத்தில் இந்த இரண்டு பஸ்களும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசே கர் உள்ளிட்ட விருந்தினர்களால் நாடா வெட்டி மக்கள் பயன்பாட்டிற்கு மீளக் கைய ளிக்கப்பட்டன.



சமீபத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை களஞ்சியத்தால் பழுது பார்க்கப் பட்ட இரண்டு குளிரூட்டப்பட்ட பஸ்களே யாழ்ப்பாணம் – கொழும்பு சேவைக்காக கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச் சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளு மன்ற உறுப்பினர்களான கருணை நாதன் இளங்குமரன், சிறீபவானந்த ராஜா, இலங்கை போக்குவரத்து சபை துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வேலணை வயல்வெளிகளைத் தீ மூட்டும் விசமிகள் மக்களுடன் கால்நடைகளும் பறவைகளும் பாதிப்பு

## கட்டுப்படுத்த முடியாமல் திணறும் அதிகாரிகள்!





மண்கும்பான் பிள்ளையார் கோயில் சுற்றுப்புறத்தில் இருக்கும் வயல் காணி களில் காணப்பட்ட புதர்களுக்கு விசமிகள் தீ மூட்டியமையால் புற்கள் சுடர்விட்டு பற்றி எரிந்து வீதியால் மக்கள் செல்லமுடி யாத நிலை உருவாகியுள்ளதுடன் கால்நடைகளும் பெரும் அசௌகரி யங்களைச் சந்தித்துள்ளன.

இது தொடர்பாக பிரதேச சபை தவி சாளருக்கு அறியப்படுத்தியதை அடுத்து துரித நடவடிக்கை மேற்கொண்ட தன் பிரகாரம் யாழ் மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் அந்தப் பகுதிக்கு வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு பிர தேச சபை உறுப்பினர்களான அனுசியா ஜெயகாந்த், சுவமிநாதன் பிரகலாதன், கருணாகரன் நாவலன், செந்தமிழ்ச் செல்வன் கேதீஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று தீப் பரவலை கட்டுப்படுத்தும் துறைசார் அதிகாரிகளுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை முன் னெடுத்தனர்.

வீசும் கடும் காற்றுக் காரணமாக பெரும் சுடர்விடு எரிந்த தீயை தீயணைப்பு படையினர் பலமணி நேரம் போராடிய கட்டுப்படுத்தினர்.

இதேநேரம் அல்லைப்பிட்டி அலுமி னியம் தொழிற்சாலை பகுதியில் இருந்து அராலிச் சந்தி வரைதான பல கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வயல் வெளி களில் உள்ள புற்களுக்கு வருடாவரு டம் விசமிகள் தீமூட்டி வருவதும் அதை அணைப்பதும் தொடர்கதையாகி இருக்கின்ற நிலையில் இந்தச் சட்ட விரோத செயலைச் செய்யும் விசமிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ கட்டுப்படுத் தவோ முடியாது பிரதேசத்தின் அதிகா ரிகள் திணறிவருகின்றனர்.

பறவைகள் சரணாலயம் அமைந் துள்ள இந்தப் பகுதிக்கு பருவ காலங்க ளில் வெளி நாட்டுப் பறவைகள் அதிகள வில் வருகை தருவதும் அவை இங்கு தமது இனப்பெருக்கங்களை செய்வ தும் வழமை.

இவ்வாறு தீ வைக்கப்படுவதால் பற வைகள் சரணாலயமும் கேள்விக்குறி யாக்கியுள்ளது.

இதேநேரம் இவ்வாறு தொடர்ச்சியாக புற்றரைகள் தீவைக்கப்படுவதால் அந்த புற்களை உணவாக கொள்ளும் கால்நடைகளும் உணவின்றி குடிமனை களுக்கு செல்லும் நிலையும் அதனால் கட்டாக்காலி தொல்லை எனப் பிரச்சினை கள் உருவாகி மக்களுக்கும் அதிகாதி களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றி வருவதும் குறிப்பிடத்தக் கது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.08.2025


மேஷம்

இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காணப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.


ரிஷபம்

இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.


மிதுனம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.


கடகம்

இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.


சிம்மம்


இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது.


கன்னி

இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.


துலாம்

இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.


விருச்சிகம்

இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.08.2025




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

# தம்புள்ளை - ஹபரணை வீதியில் நேற்று பாரவூர்தி மோதி யானைக் குட்டி மரணம்

**(உடப்பு க.மகாதேவன்)**

தம்புள்ளை – ஹபரணை வீதியில் ஹிரிவடுன்ன பகுதியில் பாரவூர்தி மோதி யானை குட்டி ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து நேற்றுப் புதன் கிழமை அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீமெந்து ஏற்றியவாறு பயணித்த பாரவூர்தி ஒன்றே யானைக் குட்டியோடு மோதியுள்ளது. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.





